தினமலர்
நிறுவனர்: டி.வி.ராமசுப்பையர்

01.12.2013

# சங்கர நேத்ராலயா அகடமி சார்பில் மருத்துவமனை மேலாண்மை படிப்பு

சென்னை, டிச. 1— 'வார இறுதி நாளில் நடக்கும், மருத்துவமனை மேலாண்மை சான்றிதழ் படிப்பில் சேர, டிச., 15ம் தேதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும்' என, சங்கர நேத்ராலயா அகடமி தெரிவித்துள்ளது.

சென்னை சங்கர நேத்ராலயா மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் ஒரு அங்கமான, சங்கர நேத்ராலயா அகடமி, மருத்துவ மேலாண்மை சான்றிதழ் படிப்பிற்கான, 12 வகுப்புகளை, நுங்கம்பாக்கம், சங்கர நேத்ராலயா முதன்மை வளாகத்தில், சனி தோறும், பிற்பகல், 2:00 முதல் 5:00 மணி வரை துவங்க உள்ளது.

வரும், ஜன., 18ம் தேதி முதல் துவங்கும் இந்த வகுப்புகள் பற்றிய விவரங்களுக்கு, அகடமி அதிகாரி மகாலிங்கத்தை, 97104 85295 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.